

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சார்பில் நெல்லை மாவட்டம் கொக்கிரகுளம் ரோஸ் மஹாலில் சமுதாய வளைகாப்பு திருவிழா (பாளை வட்டாரம்) நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் பங்கேற்று 150 கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமார்,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான்,மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், துணை மேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

### தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை

# நெல்லை கிழக்கு மாவட்டம் முழுதும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை.பிப்.25.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர் நம்பி, மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடைப்பன் பங்கேற்று முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக நிர்வாகிகளின் கருத்துக்களை கேட்டறிந்து, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஏழை, எளிய, மக்கள் பயன்பெறும் வகையில் வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞானதிரவியம் ஆ.பிரபாகரன்,எஸ்.ஏ.கே.சித்திக்,

பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன்,கணேசன்,அபூபக்கர், கனகராஜ்,சாந்தி,மாநில மீனவரணி துணைச் செயலாளர் எரிக்ஜுடு,

ஒன்றிய செயலாளர்கள் சிவனு பாண்டியன் என்ற பரணி சேகர், முத்துக்கிருஷ்ணன்,போர்வெல் கணேசன்,கண்ணன், சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின்,ராஜன்,செல்வ கருணாநிதி, ஜோசப்பெல்சி,நகர செயலாளர்கள் கணேசன்,சுப்பிரமணியன் என்ற மணி சூரியன்,பேரூர் செயலாளர்கள் ஜான்கென்னடி,சேதுராமலிங்கம், தமிழ்வாணன்,எம்.வானுவாமலை, அயூப்கான், கசமுத்து, வானுவாமலை, மணிகண்டன்,சிந்தாமதார்,மணிஷா செல்வராஜ்,சுப்பையா,இசக்கி பாண்டியன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், மல்லிகா,அன்றனி ஆல்வின் பிரேமா, செல்வ சூடாமணி,பிரேம் ஆனந்த், மாடசாமி,சுப்பிரமணியன் என்ற நெல்லை மணி,நெடுஞ்செழியன், கார்த்திக் குமார்,சகாயபிரபு, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு.

**தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றம்!**

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய உழைப்பினால் தொழில்துறையில் முதன்மை,பொருளாதார ரீதியாக அதிவேக முன்னேற்றம் கல்வியில் இந்தியாவின் முதன்மை என தமிழ் நாட்டின் முன்னேற்றம் இருந்து வருகிறது.தமிழ்நாட்டின் வளர்ச்சியும் மக்களின் வளர்ச்சியுமே தனது குறிக்கோளாக கொண்டு உழைத்து வருகின்ற நம் தலைவர் தளபதியார் அவர்கள் உழைப்பால் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றி வருகிறார்கள்.மக்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்களை எண்ணி பாராட்டி புகழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நலத்திட்டங்களை பார்த்து மற்ற மாநிலங்களும் தங்கள் மாநிலங்களில் அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்காக முயன்று வருகிறார்கள்.இது போன்று மாநிலங்களுக்கு எல்லாம் உதாரணமாக தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்களுடைய பிறந்தநாள் மார்ச் 1ஆம் தேதி ஆகும். கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர,பேரூர்,கிளை,வார்டு உள்ளிட்ட பகுதிகளில் கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், விளையாட்டுப் போட்டிகள் நடத்தியும் மாணவ,மாணவியர்க்கு,மகளிர்களுக்கு என அனைவருக்கும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி பிறந்த நாளை மிகச் சிறப்பாக கொண்டாட இக்கூட்டம் முடிவு செய்கிறது.



**பொதுக் கூட்டங்கள் நடத்திடுவோம்!**

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை,எளிய,மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பொதுக்கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள் மற்றும் திண்ணைப் பிரச்சாரம் நடத்த வேண்டும். அக்கூட்டங்களில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் 4 ஆண்டு சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் இக்கூட்டங்களை ஒன்றிய,நகர, பேரூர் மற்றும் சார்பு அணிகளின் சார்பில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்திடவும்,அதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள்,கிளை,வார்டு கழக நிர்வாகிகள்,மாநில,மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்று திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் பொதுக்கூட்டங்கள்,தெருமுனை கூட்டங்கள் மிகச் சிறப்பாகவும் மிகுந்த எழுச்சியோடும் கொண்டாட வேண்டும்.

**வேலை வாய்ப்பு வழங்கிய முதல்வருக்கு நன்றி!**

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் கடந்த 4 ஆண்டுகளில் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து இந்தியாவில் நம்பர் 1 மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது. இந்த வளர்ச்சியில் நெல்லை மாவட்டத்திலும் அனைத்து தரப்பு மக்களும் அரசின் நலத்திட்டங்களை பெற்று மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திராவிட மாடல் அரசில் தொழில்துறையில் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் புதிதாக தொடங்கப் பட்டதின் பயனாக படித்த பல இளைஞர்களுக்கு உள்ளூரிலேயே வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர்.பிப்ரவரி 6,7 தேதிகளில் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி,கழக நிர்வாகிகளுடன் கள ஆய்வு மேற்கொண்ட திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் திறந்து வைக்கப்பட்ட டாட்டா பவர் சோலார் நிறுவனத்தில் நெல்லை,தென்காசி,தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்களும்,பெண்களும் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர்.மேலும் அதே வளாகத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள விக்ரம் சோலார் நிறுவனத்திலும் மாவட்டத்தில் உள்ள படித்த பட்டதாரிகளுக்கு அதிகமான வேலை வாய்ப்புகள் பெரும் நிலை ஏற்பட்டுள்ளது.நெல்லை மாவட்டத்தில் எதிர்கால தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு நாங்குநேரி தாலுகா மறுகால் குறிச்சி, திருவரங்கமங்கைபுரம் ஆகிய கிராமங்களில் 2291 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் தொழில் பூங்கா முளைக்கரைப்பட்டி 1200 ஏக்கர் தரிசு நிலத்தில் புதிய சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் சிப்காட் தொழில் பூங்காக்களால் நெல்லை மாவட்டம் தொழில்கள் நிறைந்த மாவட்டமாக மாறும் விவசாய பூமியான இந்த மாவட்டம் மழை பொய்த்து போகும் ஆண்டுகளில் மக்கள் தொழில் ஏதும் இன்றி தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் நிலையில் இருந்தவர்களுக்கு இந்த தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும் போது அவர்களின் வாழ்வு பாதுகாக்கப் படும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. நெல்லை மாவட்டத்திற்கு புதிய திட்டங்களை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**துணை முதல்வருக்கு நன்றி!**

துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள் முன்னெடுப்பில் கழகத்திற்கு இளம் பேச்சாளர்களை பல்வேறு கட்டங்களாக தேர்வு செய்து அவர்களுக்கு பயிற்சியும் கொடுத்து 2026 தேர்தலில் 234 க்கு 200 படைப்போம் என்ற தலைவரின் வரலாற்று வெற்றி இலக்கினை நோக்கி பயணிக்க இளைஞர் பட்டாளத்தை ராணுவக் கட்டுப்பாடோடு வழி நடத்தி செல்லும் துணை முதல்வர் அவர்கள் கழகத் தலைவர் அவர்களுக்கு துணையாக அரசு பணியிலும்,கழகப் பணியிலும் கழகத் தலைவரின் உழைப்பை போல் தன்னிடம் கொண்டு தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உயர்த்த அயராது உழைக்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

**அன்னைத் தமிழைக் காக்க அயராது பாடுபடும் முதல்வர்!**

இந்தி திணிப்பு எந்த வடிவில் வந்தாலும்,எந்த நிலையில் வந்தாலும்,எந்த காலகட்டத்தில் வந்தாலும் அதை எதிர்க்கின்ற இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வந்துள்ளது.பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் அன்னைத் தமிழைக் காக்க அயராது பாடுபட்டு வருகிறார்.நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள். இந்நிலையில் தற்போது ஒன்றிய அரசு முன்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் பள்ளிக்கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவோம் என்று மிரட்டி, தர வேண்டிய நிதியை முழுமையாக நிறுத்தி வைத்திருக்கிறது.இந்தி திணிப்பை ஒன்றிய அரசு ஒருபோதும் ஏற்க மாட்டோம் என்று கழகத் தலைவர் அவர்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள்.இந்தி திணைப்பை ஒன்றிய அரசு மேற்கொள்ளும் போதெல்லாம் தமிழ்நாடு ஒன்றிணைந்து எதிர்த்து வந்திருக்கிறது.

**ஒன்றிய அரசுக்கு கண்டனம்!**

வரலாற்றில் இந்தி மொழியினால் அழிந்த மொழிகள் பல உண்டு.இந்த மொழி ஆதிக்கத்தை தமிழ்நாட்டில் ஒருபோதும் தமிழ் மக்கள் ஒத்துக்கொள்ள முடியாது.இந்தி படித்தால் மட்டுமே அனைத்து துறையிலும் உயர்ந்தவர்கள் கிடையாது. ஆனால் இரு மொழிக் கொள்கையால் படித்து அறிஞர் ஆனவர்கள் தான் உண்டு.இந்தி படித்து இந்தி பேசும் மக்கள் வாழும் மாநிலங்கள் அனைத்து துறையிலும் பின்தங்கிய நிலையிலே உள்ளன, என்பதை இந்தியை திணிக்க நினைப்பவர்கள் உணர்ந்து தங்களை திருத்திக் கொள்ள வேண்டும்.ஆகவே ஒன்றிய அரசின் இந்த போக்கினை மாவட்ட செயற்குழு கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று தமிழ்நாடு அனைத்து துறையிலும் முன்னிலையில் உள்ளது.மற்ற மாநிலங்களை விட வளர்ச்சியில் வழிகாட்டியாக முன்னேறி வருவதை தடுக்கும் எண்ணத்தில் வெள்ள நிவாரண நிதி தர மறுப்பதும்,கல்வி வளர்ச்சிக்கு சட்டப்படி தர வேண்டிய நிதியை தர மறுப்பதும்,ரயில்வே திட்டங்களுக்கு பணம் எதுவும் ஒதுக்கீடு செய்யாமலும்,100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு சட்டப்படி தர வேண்டிய நிதியை தராமல் இருப்பதும்,மொழி வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்யும் பணத்தில் பாரபட்சமாக தமிழ்மொழி வளர்ச்சிக்கு 8 கோடியும்,இந்தி வளர்ச்சிக்கு 600 கோடிக்கு மேல் ஒதுக்கீடு செய்து தமிழக வளர்ச்சியை தடுக்க நினைக்கும் ஒன்றிய அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதோடு அனைத்து துறையிலும் மற்ற மாநிலங்களை விட வேகமாக முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு வளர்ச்சியை தடுக்கும் எண்ணத்தோடு ஜாதி,மத உணர்வுகளை தூண்டி குழப்பத்தை ஏற்படுத்த முயல்வதும் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயல்படும் பி.ஜே.பி. ஒன்றிய அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**ஊக்கம் தரும் அமைச்சர் நேருவுக்கு நன்றி!**

முதலமைச்சர் தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்திற்கு 2025 பிப்ரவரி 6, 7 தேதிகளில் வருகை தந்தார்கள். அன்றைய தினம் நமது கிழக்கு மாவட்டத்தின் சார்பாக முதல்வர் அன்புத்தளபதியார் அவர்களை வரவேற்கும் வண்ணமாக சிறப்பான வரவேற்பும் அறிவிக்கப்பட்டது. நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகச் சிறப்பாக நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உறுதுணையாக இருந்து,தொண்டர்களையும்,கழக நிர்வாகிகளையும் ஊக்குவித்து சிறப்பாக பணியாற்றிய மாவட்ட கழகத்திற்கு ஆக்கமும்,ஊக்கம் அளித்து வரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேருவை இக்கூட்டம் மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறது.‘

மேலும் நெல்லை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய நகர, பேரூர், வார்டு, கிளை அமைப்புகளின் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் நகர்ப்புற,ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள், நிர்வாகிகள்,கழகத் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியை மனதார தெரிவித்துக் கொள்கிறது. கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் சாதனைகளால் கழகத் தொடர் வெற்றி பெற்று வருகின்றது. அதன் தொடர்ச்சியாக ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் பல்லாயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்றது.கழகத் தலைவர் அவர்களுக்கும்,இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,அவர்களுடன் தேர்தல் பணியாற்றிய தேர்தல் பணி குழுவினருக்கும் மற்றும் பணியாற்றிய கழகத்தினர்களை இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி அவர்களின் தந்தை எம்.எஸ்.ஜெயச்சந்திரன் அவர்கள் மறைவு, சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்களின் உடன் பிறந்த அண்ணன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு அவர்களின் பெரியப்பா மார்த்தாண்ட நாடார் அவர்கள் மறைவு,கழக வழக்கறிஞர் கோபால் அவர்களின் தந்தை சுப்பிரமணியன் அவர்கள் மறைவு, அம்பா சமுத்திர நகர முன்னாள் கவுன்சிலர் அலெக்சாண்டர் அவர்கள் மறைவு. ஆகியோர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு தொகுதி ஆலத்தூர், பி.ஆர்.மகாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் சார்பாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் ‘சமுதாய வளைகாப்பு விழா’ நடைபெற்றதில் கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் , மாநகராட்சி மண்டல தலைவர் வாசுகி சசிகுமார் , மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் .ம. ஷீலா சுந்தரி கழக நிர்வாகிகள் சிறைச்செல்வன் வீரராகவன் மருது பாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் – குறைகள் கண்டறிவதிலும்

# தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!

*சென்னை, பிப்.25-*

*சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் - குறைகள் கண்டறிவதிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் அறிவிக்கையின்படி தமிழ்நாடு அரசு ஒரு தற்சார்பற்ற சமூக தணிக்கைச் சங்கத்தினை தோற்றுவித்து 2012-2013 ஆம் ஆண்டு முதல் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இச்சங்கத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும், பயிற்சி பெற்ற மாவட்ட / வட்டார / கிராம வள பயிற்றுநர்கள் சமூக தணிக்கை நடத்துவர். சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது ஆகும்.*



*சமூக தணிக்கையினை முறையாக நடத்துவதிலும், குறைகள் கண்டறிவதிலும், முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதிலும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுவதால், தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.*

*கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் சமூக தணிக்கைகள் முடிந்தவுடன், தயார் செய்யப்பட்ட சமூக தணிக்கை அறிக்கைகள் சிறப்பு கிராம சபைகளில் பொது மக்கள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. இவை அனைத்தும் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆகும். பின்னர் இப்பத்திகள் ஒவ்வொன்றின் மீதும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படும். அனைத்து சமூக தணிக்கை பத்திகளையும் ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உயர் மட்டக்குழுவில் முடிவு செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட வேண்டிய தொகை இறுதி செய்யப்படும்.*

*பின்னர் அத்தொகை சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்டு உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படும்.*

*சமூக தணிக்கை ஆரம்பிக்கப்பட்ட 2012-13ம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளின் சமூக தணிக்கை அறிக்கைகளின்படி மொத்தம் ரூ.291.46 கோடி நிதி இழப்பீடு எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அளவில் இது குறித்து ஆய்வு செய்யப்பட்டும். ஏற்புடைய பத்திகள் கண்டறியப்பட்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழுவில் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.105.35 கோடி என முடிவு செய்யப்பட்டது. பின்னர் அரசின் தீவிர முயற்சியின் மூலம் இதில் ரூ.98.26 கோடி தொகை வசூல் செய்யப்பட்டு அதாவது 93 சதவிகிதம் அரசின் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*2024-25ஆம் ஆண்டிலும், சமூக தணிக்கை நடைபெற்று, 79,122 குறை பத்திகள் என இது வரை அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இதில் 30.198 பத்திகள் நிதி இழப்பீடு பத்திகள் எனவும், அதற்கான தொகை ரூ.14.07 கோடி எனவும், மீதமுள்ள 48,924 பத்திகள் நிதி இழப்பீடு இல்லாத சாதாரண பத்திகள் எனவும் அறிக்கை பெறப்பட்டது.*

*இப்பத்திகள் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்பட்டும், ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் உயர்மட்டக் குழுவில் 6,437 பத்திகள் மற்றும் ரூ.204 கோடி நிதி இழப்பீடு என முதற்கட்டமாக முடிவு செய்யப்பட்டது. மேலும் இதில் வசூல் செய்யப்பட வேண்டிய பத்திகளாக 6215 பத்திகளும் நிதி இழப்பீடு தொகையாக இதுவரை ரூ.1.94 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை குறித்து உயர்மட்டக்குழுக் கூட்டம் மூலம் முடிவு செய்யப்பட சீரிய முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இது மாநில அளவில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.*

*மேற்படி நிதி இழப்பீடு தொகை ரூ.194 கோடியில் சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து ரூ.193 கோடி வசூல் செய்யப்பட்டு அரசின் தலைப்பில் கட்டப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக, மேற்படி முறைகேட்டிற்கு காரணமானவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பத்திகளின் மீதும் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழு கூட்டம் நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வனைத்து பணிகளும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு -அமைச்சர் இ.பெரியசாமி குறிப்பிட்டுள்ளார்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.02.2005) கூட்டுறவுத்துறைபின் மூலம் முதல்வர் மருந்தகங்களை துவக்கி வைத்ததையொட்டி இராமநாதபுரம் நகரில் உள்ள முதல்வர் மருந்தக விற்பனை மையத்தில் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் முதல் விற்பனையை துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி வடக்கு ஒன்றியம் காட்டுநாயக்கன்பட்டியில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார். போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன், திருகண்ணன் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.